**145/2025-T**

Question Booklet Alpha Code **A**

Question Booklet Serial Number

Total No. of questions : 100

Time : 1 Hour 15 Minutes

Maximum : 100 Marks

## INSTRUCTIONS TO CANDIDATES

1. The question paper will be given in the form of a Question Booklet. There will be four versions of question booklets with question booklet alpha code viz. A, B, C & D.
2. The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the question booklet.
3. The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.
4. If you get a question booklet where the alpha code does not match to the allotted alpha code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.
5. The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your question booklet is un-numbered, please get it replaced by new question booklet with same alpha code.
6. The question booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the question booklet, until the indication is given to start answering.
7. Immediately after the commencement of the examination, the candidate should check that the question booklet supplied to him contains all the 100 questions in serial order. The question booklet does not have unprinted or torn or missing pages and if so he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same alpha code. This is most important.
8. A blank sheet of paper is attached to the question booklet. This may be used for rough work.
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. Each question is provided with four choices (A), (B), (C) and (D) having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball-Point Pen in the OMR Answer Sheet.
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3 mark will be deducted. No negative mark for unattended questions.**
12. No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.
13. Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.

# 145/2025-T

Maximum : 100 marks

Time : 1 hour and 15 minutes

**1.** கேரளாவின் தற்போதைய தலைமைச் செயலாளர் யார்?

(A) வி. வேணு (B) கே. ஜெயக்குமார்

(C) டாக்டர். ஏ. ஜெயதிலக் (D) ஏ. ஷாஜகான்

**2.** இஸ்ரோவின் புதிய தலைவர் யார்?

(A) டாக்டர். எஸ். சோம்நாத் (B) டாக்டர். வி. நாராயணன்

(C) வி. ஆதிமூர்த்தி (D) சதீஷ் தவான்

**3.** தேசிய விளையாட்டு தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

(A) ஆகஸ்ட் 27 (B) மார்ச் 27

(C) செப்டம்பர் 16 (D) ஆகஸ்ட் 29

**4.** திரைப்படமாக எடுக்கப்பட்ட முதல் மலையாள நாவல் எது?

(A) விகதகுமாரன் (B) மார்த்தாண்டவர்மா

(C) செம்மீன் (D) அவகாசிகள்

**5.** பின்வரும் வார்த்தைகளைச் சேர்க்கவும் :

1. கதகளி a. குஞ்சன் நம்பியார்

2. ஓட்டன் துள்ளல் b. குமரனாசான்

3. சண்டாலபிக்ஷுகி c. செருஸேரி

4. கிருஷ்ணகாத d. கொட்டாரக்கர தம்புரான்

(A) 1-d, 2-a, 3-b, 4-c (B) 1-d, 2-c, 3-a, 4-b

(C) 1-c, 2-a, 3-d, 4-b (D) 1-b, 2-d, 3-a, 4-c

**6.** கேரளாவின் தற்போதைய கலாச்சார துறை அமைச்சர் யார்?

(A) சிஞ்சுராணி (B) வி. சிவன்குட்டி

(C) சஜி செரியன் (D) ரோஷி அகஸ்டின்

7. ‘இந்தியாவின் அக்னி புத்ரி’ என்று அழைக்கப்படும் டெஸ்ஸி தோமஸ் பிறந்த இடம் எது?

(A) கோட்டயம்
(B) ஆலப்புழா
(C) இடுக்கி
(D) எர்ணாகுளம்

8. இந்திய விளையாட்டுத்துறையில் வழங்கப்படும் மிக உயரிய விருது எது?

(A) அர்ஜுனா விருது
(B) துரோணாச்சார்யா விருது
(C) மௌலானா அபுல் கலாம் ஆசாத் டிராபி
(D) தயான் சந்த் கேல் ரத்னா விருது

9. 2023 இல் ‘தாதா சாகேப் பால்கே விருது’ வென்ற மலையாளத் திரைப்பட நடிகர் யார்?

(A) மம்முட்டி
(B) மோகன்லால்
(C) பிருத்விராஜ்
(D) கமல்ஹாசன்

10. கேரள மறுமலர்ச்சி இயக்கத்தில் பல மாற்றங்களுக்கு வழிவகுத்த புகழ்பெற்ற நாடகமான ‘அடுக்களயில் நிந்நு அரங்கத்தேக்கு’ எழுதியவர் யார்?

(A) ஓ. சந்து மேனன்
(B) சி.வி. ராமன் பிள்ளை
(C) வி.டி. பட்டத்திரிபாட்
(D) ஏ.ஆர். ராஜராஜ வர்மா

11. இந்தியாவுடன் நில எல்லையைப் பகிர்ந்து கொள்ளாத நாடு எது?

(A) தஜிகிஸ்தான்
(B) மியான்மர்
(C) ஆப்கானிஸ்தான்
(D) பூட்டான்

12. வடக்கு மலைப்பகுதியில் அமைந்துள்ள இமாச்சலப் பிரதேசத்தையும் திபெத்தையும் இணைக்கும் பிரதான கணவாய் :

(A) லிபு லேக்
(B) ஷிப்கி லா
(C) சோஜி லா
(D) நாது லா

13. காரகோரம் மலைத்தொடர் தொடர்பான சரியான கூற்று எது?

I. காட்வின்-ஆஸ்டின் காரகோரம் மலைத்தொடரில் அமைந்துள்ளது.

II. காட்வின்-ஆஸ்டின் இந்திய துணைக்கண்டத்தின் மிக உயரமான சிகரம்.

III. திபெத்தில் உள்ள கைலாஷ் மலைத்தொடர் காரகோரம் மலைத்தொடரின் தொடர்ச்சியாகும்.

(A) I சரி

(B) I, II சரி

(C) I, III சரி

(D) III சரி

14. தீபகற்ப நதிகள் தொடர்பான சரியான கூற்று எது?

I. நர்மதா நதி சத்தீஸ்கரின் மைக்கலா மலைத்தொடரில் இருந்து உருவாகிறது.

II. சபரி மற்றும் இந்திராவதி ஆகியவை கிருஷ்ணா நதியின் துணை நதிகள் ஆகும்.

III. தீபகற்ப ஆறுகளுக்கு வெளியேற்றத்தின் தீவிரம் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது.

(A) I, II சரி

(B) II, III சரி

(C) I, III சரி

(D) இவை அனைத்தும் சரி

15. ஒடிசாவில் உள்ள முக்கிய இரும்புத் தாது சுரங்கப் பகுதி :

(A) சுந்தர்கார் (B) சிங்பும்

(C) ஷிமோகா (D) நீலகிரி

16. தேசிய நீர்வழி NW3 கடந்து செல்லும் இந்திய மாநிலம் :

(A) குஜராத் (B) மேற்கு வங்கம்

(C) கேரளா (D) ஆந்திரப் பிரதேசம்

17. இந்தியாவின் முக்கிய அணு மின் நிலையமான ராவத் பட்டா அமைந்துள்ள மாநிலம் :

(A) குஜராத் (B) மத்தியப் பிரதேசம்

(C) மகாராஷ்டிரா (D) ராஜஸ்தான்

18. மகாராஷ்டிராவின் ரோஹாவிலிருந்து கர்நாடகாவின் மங்களூர் வரை கொங்கன் ரயில்வே கடக்கும் ஆறுகளின் எண்ணிக்கை :

(A) 146 (B) 149

(C) 144 (D) 140

19. வங்காளத்தின் ஆரம்பகால செய்தித்தாள் :

(A) ராஜ்ய சமாச்சார் (B) பாம்பே சமாச்சார்

(C) சுலப சமாச்சார் (D) சம்பத் கௌமுதி

20. பின்வருவனவற்றில் எது ராபி பயிர் அல்ல?

(A) புகையிலை (B) கடுகு

(C) பருத்தி (D) கோதுமை

21. சமூக சீர்திருத்த இயக்கமான பிரம்ம சமாஜத்தைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?

(i) இது சாதி அமைப்பை ஒழித்தது.

(ii) பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டு வந்தது.

(iii) இது சதி மற்றும் குழந்தை திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

(iv) இது பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான கல்வி நிறுவனங்களைத் தொடங்கியது.

(v) இது இந்தியாவில் முஸ்லிம்களின் சமூக முன்னேற்றத்திற்காக வாதிட்டது.

(A) (i), (ii), (iv) (B) (ii), (iv), (v)

(C) (i), (ii), (iii) (D) (i), (ii), (v)

22. சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவின் ஒரு பகுதியாக மாற மறுத்த சுதேச அரசுகள் யாவை?

(i) காஷ்மீர், திருவிதாங்கூர், ஜூனகத்

(ii) ஹைதராபாத், கொச்சின், மைசூர்

(iii) ஜூனகத், குவாலியர், ஹைதராபாத்

(iv) ஹைதராபாத், ஜூனகத், காஷ்மீர்

(A) (i) (B) (ii)

(C) (iii) (D) (iv)

23. காந்திஜியின் புறக்கணிப்பு இயக்கத்தை எதிர்த்து 1923 இல் ஸ்வராஜ் கட்சியை உருவாக்கிய தலைவர்கள் யார்?

(i) கோபாலகிருஷ்ண கோகலே

(ii) சுபாஷ் சந்திர போஸ்

(iii) சி.ஆர். தாஸ்

(iv) மோதிலால் நேரு

(A) (i), (iv) (B) (ii), (iii)

(C) (iii), (iv) (D) (i), (ii)

24. பெண்களின் உயர்கல்விக்காக 1916 இல் மகாராஷ்டிராவில் மகளிர் பல்கலைக்கழகம் யாருடைய தலைமையில் நிறுவப்பட்டது?

(A) பால கங்காதர திலகர்

(B) ஜி.ஜி. அகர்கர்

(C) டி.கே. கார்வே

(D) மௌலானா அபுல் கலாம் ஆசாத்

25. சுதந்திரப் போராட்டத்தின் போது இந்தியர்களிடையே தேசபக்தியை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகித்த பாரத மாதாவின் படத்தை வரைந்தவர் யார்?

(A) ராஜா ரவி வர்மா

(B) அபனீந்திரநாத் தாகூர்

(C) நந்தலால் போஸ்

(D) அம்ரிதா ஷெர்கில்

26. இந்திய தேசிய இயக்கத்திற்கு வலிமை அளித்த வட்டார செய்தித்தாள்களைக் கட்டுப்படுத்த ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட வட்டார மொழி பத்திரிகைச் சட்டம் எந்த ஆண்டு நடைமுறைக்கு வந்தது?

(A) 1809 (B) 1878

(C) 1885 (D) 1924

27. சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்தியாவில் முதல் சுதந்திரத் தேர்தல் எப்போது நடைபெற்றது?

(A) 1951-1952 (B) 1952-1953

(C) 1953-1954 (D) 1954-1955

**28.** மொழி அடிப்படையில் மாநில மறுசீரமைப்பு ஆணையம் உருவாக்கப்பட்ட போது, தலைவர் மற்றும் பிற உறுப்பினர்கள் யார்?

(i) கே.எம். பணிக்கர், பொட்டி ஸ்ரீராமுலு, எச்.என்.குன்ஸ்ரு

(ii) எச்.என். குன்ஸ்ரு, வல்லபாய் படேல், கே.எம். பணிக்கர்

(iii) ஃபசல் அலி, கே.எம். பணிக்கர், எச்.என்.குன்ஸ்ரு

(iv) கே.எம். பணிக்கர், டாக்டர். ராதாகிருஷ்ணன், ஃபசல் அலி

(A) (i) (B) (ii)

(C) (iii) (D) (iv)

**29.** சுதந்திரப் போராட்டம் தொடர்பான கேரளாவில் நடந்த நிகழ்வுகளை காலவரிசைப்படி வரிசைப்படுத்துங்கள்.

(i) குந்தரா பிரகடனம்

(ii) வைக்கம் சத்தியாகிரகம்

(iii) மாப்பிள்ளை எழுச்சி

(iv) மலையாளி மெம்மோரியல்

(A) (i), (iii), (iv), (ii) (B) (ii), (iv), (iii), (i)

(C) (iv), (ii), (iii), (i) (D) (i), (iv), (iii), (ii)

**30.** சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவின் விண்வெளி ஆய்வு குறித்து பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(i) இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு 1962 இல் உருவாக்கப்பட்டது.

(ii) 1969 இல் இஸ்ரோ உருவாக்கப்பட்டது.

(iii) இந்தியாவின் முதல் ராக்கெட் ஏவுதள மையம் விசாகப்பட்டினத்தில் தொடங்கப்பட்டது.

(iv) ஆர்யபட்டா செயற்கைக்கோள் 1975 இல் வெற்றிகரமாக ஏவப்பட்டது.

(A) (i), (ii), (iii) (B) (i), (ii), (iv)

(C) (ii), (iii), (iv) (D) (i), (ii), (iii), (iv)

**31.** தேசிய மனித உரிமைகள் ஆணையம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(i) இந்திய அரசு 1993 அக்டோபர் 12 ஆம் தேதி மனித உரிமைகள் ஆணையத்தை நியமித்தது.

(ii) ஆணையத்தில் 5 உறுப்பினர்கள் இருப்பார்கள்.

(iii) முதல் தலைவர் நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா ஆவார்.

(iv) புகார்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளது.

(A) அனைத்து கூற்றுகளும் சரியானவை.

(B) கூற்றுகள் (i), (iii), (iv) சரியானவை (ii) தவறானது

(C) கூற்றுகள் (i), (ii), (iii) சரியானவை (iv) தவறானது

(D) (iii) மட்டுமே சரியானது கூற்றுகள் (i), (ii), (iv) தவறானவை

**32.** எந்த அரசியலமைப்புத் திருத்தம் அடிப்படைக் கடமைகளின் பட்டியலில் "6 முதல் 14 வயது வரையிலான தங்கள் குழந்தைகளுக்கு கல்விக்கான வசதிகளை வழங்குவது பெற்றோரின் கடமை" என்ற கூற்றை உள்ளடக்கியது?

(A) 2002 ஆம் ஆண்டின் 84வது அரசியலமைப்புத் திருத்தம்

(B) 2002 ஆம் ஆண்டின் 86வது அரசியலமைப்புத் திருத்தம்

(C) 2003 ஆம் ஆண்டின் 87வது அரசியலமைப்புத் திருத்தம்

(D) 2004 ஆம் ஆண்டின் 89வது அரசியலமைப்புத் திருத்தம்

**33.** அடிப்படை உரிமைகள் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(i) இந்தியக் குடியரசுத் தலைவர் பிரிவு 352 இன் கீழ் அவசரநிலையைப் பிரகடனப்படுத்தினால், பிரிவு 19 இன் கீழ் உள்ள அடிப்படை உரிமைகள் இடைநிறுத்தப்படுகின்றன.

(ii) அடிப்படை உரிமைகள் நியாயமானவை.

(iii) 2002 ஆம் ஆண்டின் 86வது அரசியலமைப்புத் திருத்தம் மூலம் கல்வி உரிமை அடிப்படை உரிமைகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

(iv) அரசியலமைப்பின் பிரிவு 21 கருத்துச் சுதந்திரத்தைப் பற்றி பேசுகிறது.

(A) (ii), (iii) கூற்றுகள் மட்டுமே சரியானவை

(B) அனைத்து கூற்றுகளும் சரியானவை

(C) (ii), (iv) கூற்றுகள் மட்டுமே சரியானவை

(D) (i), (ii), (iii) கூற்றுகள் மட்டுமே சரியானவை

34. தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI) 2005 திருத்தச் சட்டம் 2019 தொடர்பாக எந்த கூற்று தவறானது?

(i) இந்திய தகவல் அறியும் உரிமைச் சட்டம் 12 அக்டோபர் 2005 அன்று நடைமுறைக்கு வந்தது.

(ii) மத்திய தகவல் ஆணையரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் அல்லது அவர் 60 வயதை அடையும் வரை, எது முதலில் வருகிறதோ அது வரை.

(iii) பிரதமர் தலைமையிலான தேர்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதி அந்த நபரை மத்திய தகவல் ஆணையராக நியமிக்கிறார்.

(iv) மத்திய தகவல் ஆணையரின் முக்கிய கடமைகள் RTI சட்டத்தின் செயல்பாட்டைக் கண்காணித்தல் மற்றும் அரசுத் துறைகளில் பொதுத் தகவல் கிடைப்பதை உறுதி செய்தல் ஆகும்.

(A) (i) மட்டும்
(B) (ii) மட்டும்
(C) (i) மற்றும் (iii)
(D) (ii), (iii) மற்றும் (iv)

35. இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தனியார் சொத்துரிமை தொடர்பான சரியான கூற்றுகளைக் கண்டறியவும்.

(i) இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்தில் தனியார் சொத்துரிமை அடிப்படை உரிமைகளின் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது.

(ii) 1978 இல் 44வது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் தனியார் சொத்துரிமை அடிப்படை உரிமைகளின் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது.

(iii) தற்போது, தனியார் சொத்துரிமை அரசியலமைப்பின் பிரிவு 300(A) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) (ii) மட்டும் சரியானது
(B) (i), (iii) மட்டும் சரியானது
(C) அனைத்து கூற்றுகளும் சரியானவை
(D) (ii), (iii) மட்டும் சரியானது

36. “ஜன கண மன” இந்தியாவின் தேசிய கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது எந்நாளில்?

(A) ஆகஸ்ட் 15, 1947
(B) நவம்பர் 26, 1949
(C) ஜனவரி 24, 1950
(D) ஜனவரி 26, 1950

**37.** இந்திய அரசியலமைப்பின் எந்தப் பிரிவில் தேசியக் கொடியைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) பிரிவு 51(A)(a)
(B) பிரிவு 51(A)(b)
(C) பிரிவு 51(A)(e)
(D) பிரிவு 51(A)(g)

**38.** இந்திய தேசிய காங்கிரஸின் எந்த அமர்வில் இந்தியாவின் 'தேசிய கீதம்' 'வந்தே மாதரம்' முதன்முதலில் பொது மேடையில் பாடப்பட்டது?

(A) 1896 கல்கத்தா மாநாட்டில்

(B) 1916 லக்னோ மாநாட்டில்

(C) 1924 பெல்காம் மாநாட்டில்

(D) 1929 லாகூர் மாநாட்டில்

**39.** அரசியலமைப்பின் எந்தப் பிரிவு 'வாய்ப்பு சமத்துவம்' பற்றிப் பேசுகிறது?

(A) பிரிவு 14
(B) பிரிவு 16
(C) பிரிவு 18
(D) பிரிவு 24

**40.** இந்தியாவின் தேசிய சின்னம் தொடர்பான தவறான கூற்று எது?

(i) முண்டக உபநிஷத்திலிருந்து எடுக்கப்பட்ட 'சத்யமேவ ஜெயதே' என்ற குறிக்கோள் தேசிய சின்னத்தின் கீழே பொறிக்கப்பட்டுள்ளது.

(ii) தேசிய சின்னத்தில் சிங்கம், காளை, குதிரை மற்றும் யானை போன்ற விலங்குகளின் உருவங்கள் உள்ளன.

(iii) தேசிய சின்னம் ஆகஸ்ட் 15, 1947 அன்று அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(iv) சாரநாத்தில் உள்ள அசோகத் தூணில் உள்ள சிங்கத்தின் வடிவம் இந்தியாவின் தேசிய சின்னமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(A) (i) மற்றும் (iii) மட்டும்
(B) (ii) மட்டும்
(C) (iii) மட்டும்
(D) (i) மற்றும் (iv) மட்டும்

**41.** கேரளாவின் மிகப்பெரிய ஏரி :

(A) வேம்பநாடு ஏரி
(B) அஷ்டமுடி ஏரி
(C) காயம்குளம் ஏரி
(D) கொடுங்கல்லூர் ஏரி

42. தட்சிண பாகீரதி எனப்படும் நதி :

(A) மஞ்சேஸ்வரம் ஆறு
(B) பம்பா
(C) பாம்பார்
(D) ஆயிரூர்

43. கேரளாவின் அதிகாரப்பூர்வ பறவை :

(A) மயில்
(B) பரவா
(C) புறா
(D) மலைமுழக்கி வேழாம்பல்

44. கேரளாவின் முதல் வனவிலங்கு சரணாலயம் :

(A) பெரியார்
(B) வயநாடு
(C) இடுக்கி
(D) பரம்பிக்குளம்

45. கொச்சியின் நுரையீரல் என்று அழைக்கப்படும் பறவைகள் சரணாலயம் :

(A) மங்களவனம்
(B) இரவிகுளம்
(C) தட்டேக்காடு
(D) பெரியார்

46. விழிஞ்சம் துறைமுகம் அமைந்துள்ள கேரளாவின் மாவட்டம் :

(A) கொல்லம்
(B) எர்ணாகுளம்
(C) பாலக்காடு
(D) திருவனந்தபுரம்

47. கேரளா விளையாட்டு தினம் :

(A) அக்டோபர் 13
(B) நவம்பர் 13
(C) அக்டோபர் 12
(D) நவம்பர் 12

48. கேரளாவின் முதல் நீர்மின் திட்டம் :

(A) குற்றியாடி
(B) சபரிகிரி
(C) பள்ளிவாசல்
(D) இடுக்கி

49. கேரளாவின் நிரந்திர பசுமைக்காடு :

(A) சைலண்ட் பள்ளத்தாக்கு
(B) இரவிகுளம்
(C) இடுக்கி
(D) நீலகிரி

50. கேரளாவின் கவர்னரான முதல் மலையாளி :

(A) வி.வி. கிரி
(B) பி. ராமையா
(C) நிகில் குமார்
(D) வி. விஸ்வநாதன்

51. திருவிதாங்கூர் அரசு பண்டாரப்பாட்ட பிரகடனத்தை வெளியிட்ட ஆண்டு :

(A) 1929
(B) 1865
(C) 1896
(D) 1914

52. கேரளாவில் நிறுவப்பட்ட முதல் தனியார் வங்கி எது?

(A) இம்பீரியல் வங்கி
(B) சார்ட்டேட் வங்கி
(C) இந்திய தேசிய வங்கி
(D) நெடுங்காடி வங்கி

53. பின்வருவனவற்றில் மலபாரில் சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்பற்ற நிகழ்வு எது?

(A) அன்னி பெசன்ட் தலைமையில் 1916 இல் நடைபெற்ற காங்கிரஸ் அமர்வு
(B) கீழரியூர் குண்டுவெடிப்பு வழக்கு
(C) முகமது அப்துர்ரஹ்மான் தலைமையிலான உப்புச் சட்ட மீறல் போராட்டம்
(D) 1936 இல் மின்சார வேலைநிறுத்தம்

54. 1932 ஆம் ஆண்டு அடிமை ஒழிப்பு இயக்கத்துடன் தொடர்பற்றவர் யார்?

(A) என்.வி. ஜோசப்
(B) கே. கேளப்பன்
(C) பி.கே. குஞ்சு
(D) சி. கேசவன்

55. கேரளாவில் முதல் பெண்கள் மாநாடு எந்த காங்கிரஸ் இயக்கத்தின் ஒரு பகுதியாக நடைபெற்றது?

(A) பாலக்காடு (B) மஞ்சேரி

(C) வடகர (D) ஒற்றப்பாலம்

56. 1921 இல் நடைபெற்ற முதல் கேரள மாநில அரசியல் மாநாட்டின் தலைவர் யார்?

(A) டி. பிரகாசன் (B) அன்னி பெசன்ட்

(C) ஏ.கே. கோபாலன் (D) பி. கிருஷ்ண பிள்ளை

57. ஸ்ரீ நாராயண குருவுடன் தொடர்பில்லாத கூற்று எது?

(A) வாதிட்டு வெற்றி பெற வேண்டாம், ஆனால் அறிந்து தெரிவிக்க வேண்டும் என்ற பிரகடனம்

(B) கல்வி மூலம் அறிவொளி பெறுதல், அமைப்பின் மூலம் வலிமை பெறுதல்

(C) பெண்களுக்கு மேலாடை மற்றும் ஜாக்கெட் அணிய உரிமை வழங்குதல்

(D) மனித அன்பு மற்றும் மதங்களுக்கு இடையேயான சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட செயல்பாடுகள்

58. தெய்வீக கருணை திருச்சபையை நிறுவிய சமூக சீர்திருத்தவாதி யார்?

(A) குமரகுருதேவன் (B) பண்டிட் கே.பி. கருப்பன்

(C) வாக்பதானந்தன் (D) சட்டம்பி சுவாமிகள்

59. 1615 ஆம் ஆண்டு கேரளாவிற்கு வந்து சாமுதிரியுடன் வியாபார உடன்படிக்கையில் கையெழுத்திட்ட ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் பிரதிநிதி யார்?

(A) லார்ட் மெக்காலே (B) லார்ட் கோனோலி

(C) வில்லியம் கீலிங் (D) வில்லியம் லோகன்

60. வயநாட்டில் குறிச்சியா கலவரம் தொடர்பான கூற்றுகள் எது?

(i) ஆங்கிலேயர்கள் அதிகப்படியான வரிகளை விதித்தனர்.

(ii) வரிகளை பணமாக செலுத்த கட்டாயப்படுத்தினர்.

(iii) வரி செலுத்த முடியாதவர்களின் விவசாய நிலங்களை அவர்கள் கைப்பற்றினர்.

(iv) அனைத்தும் சரி

(A) (i)　　(B) (ii)

(C) (iii)　　(D) (iv)

61. அழிந்து வரும் தாவரங்கள் மற்றும் விலங்குகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய 'சிவப்பு தரவு புத்தகம்' ஒவ்வொரு ஆண்டும் வெளியிடும் அமைப்பு :

(A) WWF　　(B) WFP

(C) UNESCO　　(D) IUCN

62. பழங்கள் மற்றும் காய்கறிகளை சமைக்கும்போது மூடி வைத்து வேகவைக்க வேண்டும் என்று கூறுவது எந்த வைட்டமின் இழப்பைத் தடுக்க?

(A) வைட்டமின் D　　(B) வைட்டமின் K

(C) வைட்டமின் C　　(D) வைட்டமின் E

63. சதுப்புநிலங்கள் பற்றிய சரியான கூற்றை பின்வருவனவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கவும் :

(i) இது கடலோரப் பகுதியில் மண்ணைத் தக்க வைத்துக் கொள்கிறது.

(ii) இது சுனாமியைத் தடுக்கிறது.

(iii) இது மீன் வளத்தில் குறைவை ஏற்படுத்துகிறது.

(A) (ii) & (iii) மட்டும்

(B) (i) & (iii) மட்டும்

(C) (i) & (ii) மட்டும்

(D) மேலே உள்ள அனைத்தும்

64. பின்வருவனவற்றில் முழங்கால்களில் காணப்படும் மூட்டு எது?

(A) கீல் மூட்டு (ஹிஞ்ச் ஜாயின்ட்)　　(B) பந்து மற்றும் சாக்கெட் மூட்டு

(C) நக்கிள் மூட்டு　　(D) சறுக்கும் மூட்டு

65. புவியியல் குறியீட்டு அந்தஸ்து வழங்கப்பட்ட குற்றியாட்டூர் மாம்பழம் உற்பத்தி செய்யப்படும் பகுதி எந்த மாவட்டத்தில் உள்ளது?

(A) கொல்லம்
(B) கண்ணூர்
(C) மலப்புரம்
(D) திருச்சூர்

66. பின்வருவனவற்றில் காற்றில் பரவும் நோய்கள் அல்லாதவை எவை?

(A) இன்ஃப்ளூயன்ஸா, சிக்கன் பாக்ஸ்
(B) தட்டம்மை, காசநோய்
(C) கோவிட்-19, கக்குவான் இருமல்
(D) காலரா, டைபாய்டு

67. ஈறுகளில் இருந்து இரத்தப்போக்கு மற்றும் சீழ் வரும் அறிகுறிகளைக் கொண்ட ஒருவரின் உணவில் கண்டிப்பாக சேர்க்க வேண்டிய உணவுப் பொருட்களைத் தேர்ந்தெடுக்கவும்.

(A) பால் மற்றும் பால் பொருட்கள்
(B) நெல்லிக்காய், எலுமிச்சை போன்ற பழங்கள்
(C) இறைச்சி மற்றும் இறைச்சி பொருட்கள்
(D) தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள்

68. மனிதர்களின் நிணநீர் மண்டலம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் தவறான கூற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

(A) அனைத்து இரத்த அணுக்களும் பெரிய புரதங்களும் நிணநீரில் காணப்படுகின்றன
(B) கொழுப்புகளின் செரிமானத்தால் ஏற்படும் சிறிய கூறுகளை உறிஞ்சுவதற்கு நிணநீர் உதவுகிறது
(C) நிணநீர் இரத்தத்திலிருந்து உருவாகிறது
(D) நிணநீர் அமைப்பு நோய் எதிர்ப்பு சக்திக்கு உதவுகிறது

69. மழைக்காலத்தில் பரவலாகக் காணப்படும் கொசுக்களால் பரவும் நோய்களைத் தடுக்க ஒரு பயனுள்ள வழியைத் தேர்வு செய்யவும் :

(A) தண்ணீர் தேங்க அனுமதிக்காதீர்கள்

(B) கட்டிடங்களைச் சுற்றியுள்ள களைகள் மற்றும் குப்பைகளை அகற்றவும்

(C) வாரத்திற்கு ஒரு முறை 'வறண்ட நாள்' அனுசரிக்கவும்

(D) மேற்கூறிய அனைத்தும்

70. புல் → மான் → புலி → கழுகு

இந்த உணவுச் சங்கிலியில் மூன்றாம் நிலை நுகர்வோர் யார்?

(A) புல் (B) புலி

(C) கழுகு (D) மான்

71. பின்வரும் கூற்றுகள் எந்த விஞ்ஞானியுடன் தொடர்புடையது?

(i) தங்கப் படல பரிசோதனையை நடத்தினார்.

(ii) அணுவின் கருவைக் கண்டுபிடித்தார்.

(iii) அணுவின் சூரிய மண்டல மாதிரியை அறிமுகப்படுத்தினார்.

(iv) அவர் அணு இயற்பியலின் தந்தை.

(A) ஜேம்ஸ் சாட்விக்

(B) எர்னஸ்ட் ரூதர்ஃபோர்ட்

(C) ஜே.ஜே. தாம்சன்

(D) ஐசக் நியூட்டன்

72. பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

(i) ஹாலோஜன்கள் குழு 17 இன் கூறுகள்.

(ii) இடைநிலை தனிமங்கள் குழு 14 இன் கூறுகள்.

(iii) ஹென்றி மோஸ்லி நவீன கால அட்டவணையை உருவாக்கினார்.

(iv) மெண்டலீவ் குழுக்களின் பெயரில் கூறுகளை வகைப்படுத்தினார்.

(A) (i) மற்றும் (iii)

(B) (ii) மற்றும் (iv)

(C) (i) மற்றும் (iv)

(D) அனைத்தும் சரி

73. ஒரு தட்டையான கண்ணாடியில், பொருளின் வலது பக்கம் பிரதிபிம்பத்தின் இடது பக்கமாகவும், பொருளின் இடது பக்கம் பிரதிபிம்பத்தின் வலது பக்கமாகவும் தோன்றும். இந்த நிகழ்வு என்னவென்று அழைக்கப்படுகிறது?

(A) சமரச தன்மை

(B) தொலைநோக்கு பார்வை

(C) பக்கவாட்டு ஒளிவிலகல்

(D) ஒளிவிலகல்

74. வேலையின் SI அலகு என்ன?

(A) நியூட்டன்

(B) ஜூல்

(C) பாஸ்கல்

(D) மீட்டர்

75. ஒரு மின் மோட்டாரில் ஆற்றல் மாற்றம் __________ ஆகும்.

(A) இயந்திர ஆற்றல் → மின் ஆற்றல்

(B) மின் ஆற்றல் → இயந்திர ஆற்றல்

(C) வெப்ப ஆற்றல் → மின் ஆற்றல்

(D) மின் ஆற்றல் → வெப்ப ஆற்றல்

76. பின்வருவனவற்றில் எது தாதுவின் செறிவுடன் தொடர்புடையது அல்ல?

(A) கசிவு

(B) மிதவை செயல்முறை

(C) காந்தப் பிரிப்பு

(D) உருவாக்கம்

77. பின்வருவனவற்றில் எரியக்கூடிய வாயு எது?

(A) ஆக்ஸிஜன்

(B) ஹைட்ரஜன்

(C) நைட்ரஜன்

(D) ஆர்கான்

78. இயற்கை பாலிமரான ரப்பரின் மோனோமர் எது?

(A) ஐசோபிரீன்

(B) நியோபிரீன்

(C) தியோகோல்

(D) பேக்கலைட்

**79.** நிறை பற்றிய பின்வரும் கூற்றுகளில் எவை தவறானவை?

(i) ஒரு பொருளில் இருக்கும் பருப்பொருளின் அளவு.

(ii) பொதுவான சமநிலையைப் பயன்படுத்தி அளவிடப்படுகிறது.

(iii) ஒரு ஸ்பிரிங் சமநிலையைப் பயன்படுத்தி அளவிடப்படுகிறது.

(iv) அலகு நியூட்டன்.

(A) (i) மற்றும் (ii)

(B) (iii) மற்றும் (iv)

(C) (i) மற்றும் (iv)

(D) (ii) மற்றும் (iii)

**80.** ஒரு மனிதனின் இயல்பான உடல் வெப்பநிலை என்ன?

(A) 95.6°F (B) 97.6°F

(C) 98.6°F (D) 99.6°F

**81.** $\sqrt{5625} = 75$ என்றால் $\sqrt{0.5625} + \sqrt{56.25}$ என்ன?

(A) 8.25 (B) 82.5

(C) 7.5 (D) 75.5

**82.** பின்வருவனவற்றில் மிகப்பெரிய பின்னம் எது?

$\frac{2}{13}, \frac{5}{6}, \frac{3}{4}, \frac{9}{17}$

(A) $\frac{2}{13}$ (B) $\frac{3}{4}$

(C) $\frac{5}{6}$ (D) $\frac{9}{17}$

**83.** ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு தந்தை மற்றும் அவரது மகனின் வயதுகளின் விகிதம் 5 : 1 ஆக இருந்தது. இப்போது, அவர்களின் வயதுகளின் கூட்டுத்தொகை 58 என்றால், மகனின் தற்போதைய வயது என்ன?

(A) 10 (B) 13

(C) 15 (D) 12

**84.** பின்வரும் வரிசையில் அடுத்த எண் என்ன?

2, 5, 11, 23, 47, ?

(A) 101 (B) 92

(C) 95 (D) 105

**85.** 6 வினாடிகள், 8 வினாடிகள் மற்றும் 12 வினாடிகள் இடைவெளியில் முறையே 3 மணிகள் அடிக்கப்படுகின்றன என்று வைத்துக்கொள்வோம். இந்த 3 மணிகள் எத்தனை வினாடிகளுக்குப் பிறகு ஒன்றாக ஒலிக்கின்றன?

(A) 24 வினாடிகள் (B) 36 வினாடிகள்

(C) 48 வினாடிகள் (D) 72 வினாடிகள்

**86.** TIME ஐ ஒரு குறியீட்டு மொழியில் GRNV என்று எழுத முடிந்தால், அதே குறியீட்டைப் பயன்படுத்தி BOOK ஐ எவ்வாறு எழுத முடியும்?

(A) YPPI (B) YLLP

(C) YPPL (D) YLLH

**87.** $12 + 6 \div 2 \times 3 - 4$ எளிமைப்படுத்தப்பட்டால் பின்வருவனவற்றில் எது பதிலாகும்?

(A) 11 (B) 17

(C) 23 (D) 29

**88.** மணிக்கு 90 கிமீ வேகத்தில் பயணிக்கும் ஒரு ரயில் 225 கிமீ தூரத்தை கடக்க எவ்வளவு நேரம் ஆகும்?

(A) 2 மணி நேரம்

(B) 2 மணி நேரம் 15 நிமிடங்கள்

(C) 2 மணி நேரம் 30 நிமிடங்கள்

(D) 3 மணி நேரம்

**89.** ஒரு கடைக்காரரிடம் 24 பேனாக்கள், 36 பென்சில்கள் மற்றும் 60 நோட்டுப் புத்தகங்கள் உள்ளன. அவர் அனைத்து பொருட்களையும் ஒரு பையில் மிச்சம் இல்லாமல் பேக் செய்தால், அவர் அதிகபட்சமாக எத்தனை பைகளை உருவாக்க முடியும்?

(A) 12 (B) 6

(C) 4 (D) 18

**90.** பின்வரும் எண்களில் எது தனியானது/பொருந்தாதது?

16, 36, 64, 81, 125

(A) 16 (B) 36

(C) 81 (D) 125

91. $\frac{3}{5} \div \frac{9}{10} = ?$

(A) $\frac{1}{2}$  (B) $\frac{2}{3}$

(C) $\frac{1}{3}$  (D) $\frac{3}{2}$

92. ஒரு கடைக்காரர் ஒரு டஜன் ஆப்பிள்களை ரூ. 50க்கு வாங்குகிறார். அவர் அவற்றை ஒரு ஆப்பிளுக்கு ரூ. 5க்கு விற்கிறார். எனில் பின்வருவனவற்றில் சரியான கூற்று எது?

(A) அவர் ஒரு ஆப்பிளுக்கு ரூ. 0.83 லாபம் ஈட்டுகிறார்

(B) அவர் ஒரு ஆப்பிளுக்கு ரூ. 0.83 இழக்கிறார்

(C) அவர் ஒரு ஆப்பிளுக்கு ரூ. 1.2 லாபம் ஈட்டுகிறார்

(D) அவர் ஒரு ஆப்பிளுக்கு ரூ. 1.2 இழக்கிறார்

93. ஐந்து நண்பர்களின் சராசரி எடை 55 கிலோ ஆகும். 70 கிலோ எடையுள்ள ஒரு நண்பர் குழுவிலிருந்து வெளியேறினால், மீதமுள்ள நண்பர்களின் சராசரி எடை என்ன?

(A) 50 கிலோ  (B) 52.5 கிலோ

(C) 51.25 கிலோ  (D) 54 கிலோ

94. ஒரு பெட்டியின் $\frac{3}{5}$ பகுதி ஆப்பிள்கள் மற்றும் மீதமுள்ளவை ஆரஞ்சுகள். பெட்டியில் 40 ஆரஞ்சுகள் இருந்தால், எத்தனை ஆப்பிள்கள் உள்ளன?

(A) 30  (B) 24

(C) 60  (D) 36

95. ஒரு கடையின் முன்பு 15 பேர் வரிசையில் காத்திருக்கிறார்கள். வரிசையின் முன்பக்கத்திலிருந்து ரகு ஒன்பதாவது இடத்தில் உள்ளார். வரிசையின் பின்புறத்திலிருந்து ரகுவின் நிலை என்ன?

(A) 6  (B) 7

(C) 8  (D) 9

**96.** பின்வரும் சமன்பாட்டைச் சரியாகச் செய்ய "?" எந்த வகையில் அமைக்கப்பட வேண்டும்?

30 ? 5 ? 3 = 18

(A) $\div, +$ (B) $-, \times$

(C) $+, -$ (D) $\div, \times$

**97.** $\dfrac{3.6}{0.12} = x$ என்றால், $x$ ன் மதிப்பு என்ன?

(A) 30 (B) 25

(C) 300 (D) 0.3

**98.** பின்வரும் எண்கள் ஏறுவரிசையில் அமைக்கப்பட்டால் கிடைக்கப்பெறும் பதில் என்ன?

$\frac{2}{3}, \frac{3}{5}, \frac{5}{8}$

(A) $\frac{2}{3} < \frac{3}{5} < \frac{5}{8}$ (B) $\frac{3}{5} < \frac{5}{8} < \frac{2}{3}$

(C) $\frac{5}{8} < \frac{2}{3} < \frac{3}{5}$ (D) $\frac{2}{3} < \frac{5}{8} < \frac{3}{5}$

**99.** அனு தெற்கு நோக்கி 6 மீட்டர் நடந்தாள். பின்னர் அவள் இடதுபுறம் திரும்பி 8 மீட்டர் நடந்தாள். அவள் மீண்டும் இடதுபுறம் திரும்பி 6 மீட்டர் நடந்தாள். பின்னர் அவள் வலதுபுறம் திரும்பி 10 மீட்டர் நடந்தாள். தொடக்க புள்ளியுடன் ஒப்பிட்டால் அவள் இப்போது எந்த திசையில் உள்ளாள்?

(A) கிழக்கு (B) தெற்கு

(C) மேற்கு (D) வடகிழக்கு

**100.** $\sqrt{49+\sqrt{576}}$ எவ்வளவு?

(A) $\sqrt{31}$ (B) $\sqrt{37}$

(C) $\sqrt{73}$ (D) $\sqrt{13}$

---

**SPACE FOR ROUGH WORK**

SPACE FOR ROUGH WORK